செ.வெ-120 நாள்-21/02/14.

# பத்திரிக்கை செய்தி

நமது பாரம்பரிய இசையின் உண்மைத் தன்மையை அழித்துவிடாமல் பாதுகாக்கும் பொருட்டும், தமிழகத்தின் தொன்மையான இசை மற்றும் கலைகளை பாதுகாத்து அவற்றினை எதிர்கால இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் வகையிலும் இசை மற்றும் கவின்கலைகளுக்கென முதன்முதலாக தனியாக ஒரு பல்கலைக்கழகம் **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பல்கலைகழகத்தினை துவங்கியதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும், இதனை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அறியும் வகையில் விளம்பரப்படுத்தவும், தமிழகத்தின் புகழ் பெற்ற இசை மற்றும் கலை வல்லுநர்கள் மற்றும் தமிழ்நாடு இசைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களால் சென்னை 600 028, டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலையிலுள்ள தமிழ்நாடு இசைக் கல்லூரி வளாகத்தில் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாளான 24–2–2014 அன்று தொடங்கி 27–2–2014 முடிய "66 மணிநேர தொடர் இசை மற்றும் கலை வேள்வி"** தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைகழகத்தின் சார்பாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விழாவில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு, இயக்குநர்:
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை.